Registered as a Newspaper　　மக்கள் 04　　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　மக்கள் தினசரி　　Peoples Daily

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2025　　தை 13　　(26-01-94)　　புதன்கிழமை　　ஓசை 342

## பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவி ஏற்க ஐ. தே. கவினர் மறுப்பு

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலரும் மறுப்புத் தெரிவித்து வருவதாகவும் இதனால் இப் பதவிக்கு யாரைநியமிப்பது என்பதில் இழுபறிநிலை தோன்றியுள்ளதாகவும் 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதும் பாராளுமன்ற உறுப்பினர்களிலும், மந்திரிசபையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படும் எனவும் அப்பத்திரிகை தெரிவிக்கின்றது. காமினி திசநாயக்கா உட்பட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கியஸ்தர் சிலருக்கு பாராளுமன்ற (3 பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி அகற்றும் வாகனம் கொள்வனவுசெய்ய அரசு முயற்சி

(கொழும்பு)

புதிதாக மேற்கொள்ளப் படவிருக்கும் இராணுவ நடவடிக்கைக்கு வசதியாக இராணுவம் விசேட கண்ணிவெடி அகற்றும் வாகனங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என ஐலண்ட் பத்திரிகை தெரிவிக்கின்றது.

விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிப் போரினால் இராணுவம்பலத்தஇழப்பைக் கண்டிருக்கின்றது எனக் குறிப்பிடும் அப்பத்திரிகை விடுதலைப் புலிகள் இராணுவத்தினருக்கும் அவர்களின் வாகனங்களுக்கும் எதிராக பல் வேறுகண்ணிவெடிகளை அறிமுகப்படுத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேசமயம் இராணுவத்தால் செக்தயாரிப்பான ரி-55 போர்டாங்கி அறிமுகப் படுத்தப்பட்ட போது புலிகள் அதற்கெதிரான விசேட டாங்கி எதிர்ப்புப் படையை உருவாக்கினர். இந்த டாங்கி எதிர்ப்புபடை இரு வெவ்வேறு தாக்குதல்களில் கடந்த வருடம் இராணுவம் நான்கு டாங்கிகளை இழந்து விட்டதாகவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியது.

## தொழில் மயமாக்கப்பட்ட ராணுவத்தை உருவாக்குவதே தளபதியின் திட்டம்

(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா இராணுவத்தை தொழில் மயப்படுத்தப்பட்ட இராணுவமாக்க முயற்சிகளை மேற்கொள்கின்றார். பலரின் எதிர்பார்ப்பும் புதிய தளபதியின் கீழ் இராணுவம் தொழில் மயப்படுத்தப்பட்ட இராணுவமாக வேண்டும் என்பதே. இவ்வாறு செய்வதன் மூலமே அடுத்த பத்து வருடங்களிற்குள்ளாவது பயங்கரவாதத்தை அரசினால் முற்றாக அழிக்கமுடியும். இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தொழில் மயப்படுத்தப் பட்ட இராணுவத்தை உருவாக்கலின் அவசியம் எனும் தலைப்பில் ராவணா என்பவர் எழுதிய கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சிறிலங்கா இராணுவம் தொழில் சார்ந்த படையாக மாறும் பொருட்டு முக்கிய முடிவுகளை புதிய தளபதி எடுப்பதற்கு வசதியாக அரசியல் மற்றும் பாதுகாப்பு உயர்பீடம் அனுமதிக்கவேண்டும். எனினும் கடந்த வாரங்களில் பாதுகாப்பு உயர்பீடம் எடுத்த சில முடிவுகள் லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா கூட அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதையேகாட்டுகின்றது.

இராணுவத்தை போரிடும் ஓர் இராணுவமாக மாற்றும் நடவடிக்கை சரியான இராணுவ தலைமை ஒன்றின் மூலமாகவே மேற்கொள்ளப்பட முடியும். கடந்த இரு தசாப்தங்களாக தமிழ் கிளர்ச்சிக்கு எதிராக போரிட்டபின்னரும் சிறிலங்கா இராணுவம் சரியான தளபதிகள் இன்மையினாலேயே அதன் இலக்கை இன்னும் அடையமுடியாமல் இருப்பதற்கு காரணம் என

(3ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிராக நீண்ட போருக்கு இராணுவம் தயாராகி வருகின்றது

## அரசியல் ஆய்வாளர்கள் கணிப்பீடு

[கொழும்பு]

**யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தரை மற்றும் கடற்படைக்கு எதிராக நீண்டகால போரை நடத்துவதற்கு வசதியாக அரசபடைகள் தம்மை தயார் படுத்தி வருவதாக ராணுவ, அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி ஐலண்ட் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.**

எனினும் வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் வசதிகளை முற்றாக அழிக்காது முழுமையான இராணுவ வெற்றியை அடைய முடியாது என அந்த ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அடுத்த கட்டப்போர் பெரியதும் பயங்கரமானதுமான போராகவே இருக்கும் எனவும் இரு தரப்பும் அடுத்த கட்டத்தில் வெற்றிபெற வேண்டிய அவசியமுள்ளது எனவும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை அடுத்தமாதப் பிற்பகுதியில் ஆரம்பிக்கலாம் என இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் ஆரம்ப இராணுவ நடவடிக் [...] அளவில் தொடர்ச்சியாக நடத்த திட்டமிடப்பட்டு வருவதாகவும் அறியவருகின்றது.

இதேவேளை, சிறிலங்கா இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி. சில்வா, விடுதலைப் புலிகளுக்கு எதிராக குறுகிய, நீண்டகாலப் போருக்கு திட்டங்கள் தயா[...]

## சர்வதேச செஞ்சிலுவை அதிகாரிகள் புலிகள் நேற்று சந்திப்பு

### பாதுகாப்பு வலயம் பற்றிப் பேசினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய விவகாரத்திற்கு பொறுப்பான பிரதம தலைமை அதிகாரி பிலிப் கொன்ரசா கொழும்பு வதிவிடப் பிரதிநிதி டொமினிக் மற்றும் யாழ். வதிவிடப் பிரதிநிதி [...] பேச்சுகள் நடத்தினர்.

விடுதலைப்புலிகள் சார்பில் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இப் பேச்சுக்களில் கலந்துகொண்டார். யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயத்தினுள் நடக்கும் விமானத்தாக்குதல் [...]யும் அத்துமீறல்கள் குறித்து இப் பேச்சுகளில் ஆராயப் பட்டது.

இதை நேரில் கண்டறிய இங்கு வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான தலைமையதிகாரி தாம் கொழும்பில் அரச உயர்மட்[...]

னர். அடுத்த கட்டப்போர்

னர்.

தாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் ஆரம்ப இராணுவ நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட

விடுதலைப் புலிகளுக்கு எதிராக குறுகிய, நீண்டகாலப் போருக்கு திட்டங்கள் தயாராகிவிட்டது எனக் குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே.

மற்றும் யாழ். வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் நேற்றுமாலை விடுதலைப் புலிகளுடன் இருமணிநேரப்

பாதுகாப்பு வலயத்தினுள் நடக்கும் விமானத்தாக்குதல்கள் மற்றும் எறிகணை வீச்சுகள் மூலம் படையினர் புரி

கொழும்பில் அரச உயர்மட்டத்தில் இது குறித்து பேசவுள்ளதாக பேச்சுகளின் போது தெரிவித்தார்.

### இராணுவ தலைமையகத்தில்

# நடவடிக்கை, விநியோக துறைக்கு பொறுப்பாக தளுவத்த நியமனம்

(கொழும்பு)

வடபகுதி கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ரோஹான் தளுவத்த அடுத்த வாரம் முதல் புதிதாக உருவாக்கப்பட்ட துறை ஒன்றை பொறுப்பேற்கவுள்ளார். இராணுவத் தலைமையகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் விநியோகத் துறைக்கு தளுவத்த இயக்குநர் நாயகமாக பொறுப்பேற்பார்.

இவர் இதுவரை வகித்து வந்த வடபகுதி கட்டளை அதிகாரி பொறுப்பை மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரட்ன ஏற்பார். இவர் புதுடில்லி தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ஒருவருட பயிற்சியின்பின் கடந்த மாதமே கொழும்பு திரும்பியிருந்தார். இதேசமயம் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம இவ்வாண்டு முதல் அதிகாரிகள் நிலை தலைவராக பதவி ஏற்றப்பட்டிருப்பதுடன் அவரே கிழக்கு பிராந்திய கட்டளை அதிகாரியாகவும் இருப்பார்.

முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவுக்கு இராணுவச் செயலாளராக இருந்த பிரிகேடியர் எச்.எஸ் அப்புஹாராச்சி தியத்தலாவை படைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளார். முன்னாள் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன புதிய இராணுவத் தளபதியின் இராணுவச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் யாழ்ப்பாண தளபதி பிரிகேடியர் கேமுனு குலதுங்க பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக பதவி உயர்த்தப்பட்ட பிரிகேடியர்களான சரத்முனசிங்க முல்லைத்தீவு-மணலாறு பிரதேசத்திற்கும் சூள செனிவிரட்ன வாழைச்சேனைக்கும் தளபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மூவருக்கு எரிகாயம்

(யாழ்ப்பாணம்)

வாகனம் ஒன்றிற்கு வயர் பொருத்தும்போது புளோலாம் வெடித்ததில் மூவர் எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோணாந்தோட்டம் சந்தியில் வாகனம் ஒன்றிற்கு வயர் பொருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த ஈசன் (வயது 22) என்பவரும் இவருக்கு அருகில் நின்ற பரணீதரன் (வயது15) பாக்கியராஜ் (வயது09) ஆகி

(3ஆம் பக்கம் பார்க்க)

# உணவு ஆயுதமாக பயன்படுவதை யூ. என். எச். சீ. ஆர். விரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

அரசு உணவை ஆயுதமாக பயன்படுத்தி பொதுமக்களை கட்டுப்படுத்துவதை அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகரகம் விரும்பவில்லை என யாழ்வந்த யூ. என். எச். சீ. ஆர். பாதுகாப்பு அதிகாரி பீற்றர் நிக்கலஸ் புலிகளின் குரல் வானொலிக்குத் தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து இடம் பெயர்ந்து மடுவில் உள்ள தமிழ் மக்களின் விருப்பிற்கு மாறாக உணவை ஆயுதமாக பயன்படுத்தி அரசு தான் விரும்பிய இடத்திற்கு அழைப்பது சரியல்ல எனவும் அவர் கூறினார்.

நேற்று யாழ் வந்த பீற்றர் நிக்கலஸ் இன்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார். வடக்கில் மீண்டும் யூ. என்.எச். சீ. ஆர். தனது பணியை ஆரம்பிப்பது குறித்து இப்பேச்சில் ஆராயப்படும்.

பீற்றர் நிக்கலசின் இலங்கைக்கான பதவிக்காலம் பெப்ரவரி 15ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதன் பின் இவர் பர்மாவில் யூ என். எச். சீ. ஆர். பாதுகாப்பு அதிகாரியாக பதவிஏற்பார்.

# இராணுவத்தைக் கண்டு ஓடியவர் மிதிவெடியில் காலிழந்தார்

## பூநகரி பகுதியில் சம்பவம்

(குருநகர்)

சிறிலங்கா இராணுவத்தைக் கண்டு நாலாபுறமும் சிதறிஓடுகையில் ஒருவர் மிதிவெடியில் பாதத்தை இழந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு பூநகரி-பெரியவேலிப்பகுதியில் நடைபெற்றது.

சம்பவதினம் கடலில் தொழிலில் ஈடுபட்டு நின்ற பதினைந்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் பூநகரி - காஞ்சிகாட்டுப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை தொடுத்ததும் பெரியவேலிப் பகுதிக்குச் சென்று தரை இறங்கித் தங்கினர்.

அவ்வேளை மீனவர்கள் தரித்து நின்ற பகுதியை நோக்கி இராணுவத்தினர் சுட்டுக்கொண்டு வருவதைக் கண்டு நாலாபுறமும் சிதறி ஓடினர்.

ஓடியவர்களில் குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த வின்சக்சோன் சந்திராக்குட்டி (வயது 19) என்னும் மீனவர் மிதிவெடியில் அகப்பட்டுக் காயமடைந்தார்.

அவரை விட்டுவிட்டு ஏனைய மீனவர்கள் கடலில் நீந்தியும், கரை வழியாக நடந்தும் நேற்று கரை வந்து

(3ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டில் புலிகளுக்கு எதிராக இந்தியா-சிறிலங்கா கூட்டுப் பிரசாரம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் மீதும் அவர்களது அலுவலகங்கள் மற்றும் ஏனைய வசதிகளுக்கு எதிராக வெளிநாட்டு அரசுகள் நடவடிக்கை எடுக்கச் செய்வதற்காக இந்தியாவுடன் சிறிலங்காவும் இணைந்து பிரசாரம் செய்யவுள்ளதாக சண்டே ஐலண்ட் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளிலுள்ள புலிகளின் நடவடிக்கைகளை தடுக்க இந்திய புலனாய்வுத் துறை ஏற்கனவே நடவடிக்கைகள் எடுத்து வருவதாக சில வட்டாரங்கள் குறிப்பிட்டதாக அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது. புலிகளை கையாள்வதற்கு வசதியாக மேற்கு நாடுகளில் உள்ள புலிகளுக்கு எதிரான குழுக்களின் உதவியும் இதன் பொருட்டு நாடப்பட்டுள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் கடந்த வாரம் தெரிவித்தாக சண்டே ஐலண்ட் பத்திரிகை கூறுகிறது.

# மணலாற்றில்விமானப்படை குண்டுவீச்சுத் தாக்குதல்

(மணலாறு)

மணலாற்றில் நேற்றுக் காலை விமானப்படை விமானங்கள் கடும் குண்டு வீச்சுதாக்குதலை நடத்தின. காலை 11 மணியளவில் இரு புக்காரா விமானங்களும், இரு சியாமாசெட்டி விமானங்களும் மாறிமாறி அகோர குண்டு வீச்சை குடியிருப்புக்கள் மீது நடத்தின.

இதன்போது மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தமையால் உயிரிழப்பு ஏற்படவில்லை. பல மரங்கள் முறிந்தன. பல கால்நடைகள் உயிரிழந்தன.

# பாகிஸ்தானிலிருந்து புலிகளுக்கு ஆயுதம்

## இந்திய பத்திரிகையாளரின் கண்டுபிடிப்பு

(டில்லி)

பூநகரியை தாக்க விடுதலைப் புலிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் பாகிஸ்தானிலிருந்து பெறப்பட்டவை என இந்தியப் பத்திரிகையாளர் இந்திராணி பெனர்ஜி தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலி உறுப்பினர் சிலர் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு நவீனரக வெடிப்பொருள்களை கையாள பயிற்சி வழங்குவதாக செய்திகள் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல்வாதிகளின்இலக்கு பதவிகளை பெறுவதாகிறது

வடக்கு கிழக்குப் பிரச்சினையை விடவும் தென் மாகாண சபையில் யார் ஆட்சி அமைப்பது என்பதிலேயே அரசியல்வாதிகள் குறியாக இருப்பதாக ஐலன்ட் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் ஆதங்கம் தெரிவித்துள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்படுகையில், ''விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரும்படி அழை

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள தம்பூராவும், மிருதங்கமும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- வதனி ஜுவலர்ஸ், கண்டி வீதி, கொடிகாமம் அல்லது P. ஈசன், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (சி-8452)

## தவறிவிட்டது

22ஆம் திகதி சனிக்கிழமை தம்பையா கெங்கானந்தேஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டை பேர்சுடன் நெல்லியடிக்கும் - வரணி சிட்டிபுரம் அம்மன் ஆலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயம் அல்லது கண்ணன் கூல்பார், கண்டி வீதி, கொடிகாமம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (சி-8453)

## ஸ்ரீலங்கா அச்சகம்

மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் ராஜா தியேட்டர் அருகாமை — ஸ்ரீ காந்தா அச்சகலேனிலேயே நடைபெறுகின்றது. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. (7307)

## பெயரமைத்தலுக்கான எண் ஜோதிட வெளியீடு

அதிர்ஷ்டமான திகதிகளில் பிறந்தவர்களைவிட பெயர் மாத்திரம் அதிர்ஷ்டகரமாக உடையவர்கள் மேன்மையடைவதைக் காணலாம். பெயரெண்ணை நன்றாக அமைத்துவிட்டால் வாழ்க்கை சீர்பட்டுவிடும், பலன்கள், விளக்கங்களுடன் எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஸ்ரீ வாணி, உடுப்பிட்டி. (7324)

## விற்பனைக்கு

மூன்று ஃபேஸ் வெல்டிங் உபகரணம் (3 Phase Welding Plant) விற்பனைக்குண்டு. தொடர்பு; மில்க்வைற். (சி-8455)

## தெருவிளக்கு சேவை

(குருநகர்)

வண்ணை நாவலடி இந்து மா மன்றம் கடந்த சில மாதங்களாக தெருவிளக்குச் சேவையை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

மானிப்பாய் வீதியில் ஆறு கால் மடம் - சிலுவை மத

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

26-01-94



மலர்வு 1914-05-12

உதிர்வு 1993-12 27

### அமரர் இராசையா இராசம்மா

அன்பின் தாயே ஆலமரமாய் எம்மைக் காத்து அன்பாக வழிநடத்திய நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மாதமொன்று உதிர்ந்தாலும் அன்புமுகம் மறக்க முடியவில்லையே!

1994-01-26 இன்று புதன்கிழமை நடைபெற உள்ள வீட்டுக் கிரித்தியங்களிலும், மதிய போசன விருந்துபசாரத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்-

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

''ராஜகிரி''
46, சங்கிலியன் வீதி,
நல்லூர். (சி-8454)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 1923-11-13

இறைவனடியில்: 1993-12-28

அமரர்

### திருச்சிற்றம்பலம் - இரத்தினவடிவேல்.

(A D. No. 33 கடை உரிமையாளர், முன்னாள் திருச்சிற்றம்பலம் அன் சன் உரிமையாளர், வல்வெட்டித்துறை.)

28-12-1993 அன்று இறைவனடி எய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் 27-01-1994 வியாழன் (நாளை) நடைபெற இருக்கும் அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்

## முக்கிய அறிவித்தல்

யாழ்- மாவட்டத்தில் வாடகைச் சேவையில் ஈடுபடும் மோட்டார் கார் உரிமையாளர்கள் அனைவரும் தமது வாகனத்தை யாழ். மாவட்ட மோட்டார் கார் சங்கத்தில் (யாழ். மத்திய பஸ் நிலைய அருகாமை) எதிர்வரும் 31-01-94இற்கு முன்னர் பதிவு செய்து அதற்கான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் முன்பு பதிவு செய்து த. மோ. ஊ. ப. இலக்கத்தை பதிவு செய்யாதவர்கள் மேற்படி சங்கத்தில் அவ்விலக்கத்தினை பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி.

தலைவர்,
யாழ். மாவட்ட மோட்டார்கார்
சேவைச் சங்கம்.

(7333)

## இதய அஞ்சலி

### வேலுப்பிள்ளை ஞானரத்தினம்

உத்தரவுபெற்ற நில அளவையாளர் அவர்கள் அமரத்துவமடைந்த 31ஆம் நாளில் எமது இதயபூர்வ அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வடபகுதி உத்தரவுபெற்ற
நில அளவையாளர் சங்கம்.

(7330)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின்மடியில் 28 - 07 - 1929

ஆண்டவன்அடியில் 26 - 01 - 1988

### திரு. முடியப்பு லிகோறி

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய் எங்களை வளர்த்து
ஆளாக்கிய அன்புத் தெய்வம் ஐயா நீங்கள்
எங்களை விட்டுப் பிரிந்து ஆறு ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவும் பாசமும்
பிரிவும் எங்களைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்

மனைவி- அன்னமேரி

பிள்ளைகள்- றஞ்சிதம், சைமன், றெஜி, வசந்தி,

## வீரசூரியா நியமனத்திற்கு அமைச்சரவையில் எதிர்ப்பு

(கொழும்பு)

காமினி திசநாயக்காவின் மைத்துனரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் திட்டமிடுபவராக இருந்தவருமான கலாநிதி விக்கிரம வீரசூரியாவிற்கு ஜனாதிபதி செயலகத்தில் முக்கிய பதவி வழங்கப்பட்டிருப்பது அமைச்சரவை மட்டத்தில் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகக் கூறப்படுகின்றது. இந் நியமனம் வழங்கப்படுவது தொடர்பாக கடந்தவாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை எனவும் தெரிய வருகிறது. எனினும் ஐ. தே. க.வின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான சிறிசேன குரே இதுபற்றித் தெரிவிக்கையில், இத்தகைய நியமனங்கள் வழங்குவது தொடர்பாக ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது என்றார்.

## வீதி நாடகங்கள் நடாத்தப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

''இலக்கை நோக்குவோம்'' ''எதிரியை முறியடிப்போம்'' என்னும் இரு வீதி நாடகங்கள் தற்போது பரவலாக குடாநாட்டு வீதிகளில், நடாத்தப்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழக தீவகப்பிரிவின் தயாரிப்பான இந் நாடகத்தை பெருமளவு மக்கள் பார்த்து ரசித்து வருகின்றனர். (22)

## நினைவு கூருகின்றோம்

### 1994-01-26

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவு- ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். சசி (கந்தசாமி மகேஸ்வரன் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

இம் மோதலின் பின் இப்பகுதிச் சந்தைக்குப் பொருட்கள் வாங்கவந்த பொதுமக்கள் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

திருகோணமலை - தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

வவுனியா- மாறம்பைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம்பெண்

1988ஆம் ஆண்டு யாழ் - கொடிகாமம் பகுதியில் இந்தியப்படையினர்க்கெதிரான தாக்குதல் முயற்சியின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப். பாலன் (சோமசுந்தரம் சிவபாலன் - முல்லைப்புலவு, காரைநகர் - யாழ்)

யாழ் - வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

லெப். முரளி (சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார்- விபுலானந்தர் வீதி, மாதகல் - யாழ்)

மட்டு - வாழைச்சேனை, கிண்ணையடிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை, தாய் உட்பட 05 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு யாழ் - எழுவைதீவுப் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஊர்காவற்துறையைச் சேர்ந்த தமிழிளைஞன். யாழ் இந்துக்கல்லூரிக்குட் புகுந்த இந்தியப்படையினரால் கல்வி போதித்துக் கொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்ட ஆசிரியரான தமிழ்ப்பொது மகன்.

1990ஆம் ஆண்டு தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த-

மானிப்பாய் வீதியில் ஆறு கால் மடம் - சிலுவை மத கடி வரையிலும் லோட்டஸ் வீதி, கொக்குவில் மேற்கு வீதி ஆகியவற்றில் மேற்படி மன்றம் பத்துக்கும் மேற்பட்ட தெரு விளக்குகளைச் சேவையில் ஈடுபடுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

(21)

பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்

பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி
இ. சிதம்பரநாயகி,
பாசமிகு பிள்ளைகள்
இ. திருத்தேவி,
இ. அமிர்தராணி

புளியடி வளவு,
கிழக்குத்தெரு,
வல்வெட்டித்துறை.

(7262)

மனைவி- அன்னமேரி

பிள்ளைகள்- றஞ்சிதம், சைமன், றெஜி, வசந்தி, அன்ரிப்புறோ, லக்கி, கொணறி


மருமக்கள்- செபறட்ணம், பொன்றோஸ், அமலதாஸ், ஜெயா

பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

அந்தோனியார் கோயில் வீதி,
மணற்காடு.

(7323)

# உள்ளில் விழுந்த சுவடுகளின் 6-ம் ஆண்டு



யாழ் - வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது இதழ்களிடை நச்சினைப் பதித்துப் புதுப் பரணி படைத்த-

## லெப். முரளி

### (சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார்)

விபுலானந்தர் வீதி, மாதகல் - யாழ்

தாயின் மடியில்: **18-08-1969**
வீரத்தின் விளைநிலத்துள்: **26-01-1988**

மின்னல் வெடிப்பது
விண்ணில் மட்டுமா?
மண்ணிலும் என்பதை ஓர்
கார்த்திகை முரசம் அறைந்தது-
வல்வைக் கரையெனும் பாதங்களை
வங்கக் கடலலை தொட்டு வணங்கிட
பொங்கிவெடித்ததோர்மானுடமின்னல்-
மின்னலின் பின்னலில் ஆயிரம்
மின்னல் பூக்கள் பிறப்பினைப் பெற்றன
எம் வீரா முரளி நீயும்

அண்ணலின் வழியிற்தன்னலமொழித்து
எத்துணை சாதனை படைத்தனை-
சங்கைச் சந்தியில் கவிழ்ந்த இந்தியர்
கனரக வண்டி ஆதாரம்!
புறணி வாயில் புறமுதுகிட்டோட
புதுப்
பரணி படைத்தனை-
இன்னுமெம்
உதடடிலும் உள்ளிலும்
உனது பரணியே அழியா வரம்!

-குடும்பத்தினர்.

சிலன் நகர், நாவற்குழி-யாழ்.

(7328)

1990ஆம் ஆண்டு தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த-

**சின்னக்காந்தி-சௌந்தரி** (கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் - மயிலிட்டி - யாழ்)

1991ஆம் ஆண்டு மட்டு - வாகரை அல்லைவீதியில் எதிர்பாராதவிதமாக எமது கண்ணிவெடியில் சிக்கியதில் காயமுற்ற போது சயனைட் உட்கொண்டதில் எமைப்பிரிந்த-

**காந்தன்** (இரத்தினம் கதிர்காமநாதன் -கல்முனை - அம்பாறை)

கிளி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய-

**பற்றிக்** (சின்னராசா கணேசலிங்கம் - சாம்பல்தீவு- திருகோணமலை)

மன்னார் - நாவற்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மேஜர் கௌரி-சுதுஜீவன்** (சதானந்தன் அனுதீபன் - வட்டக்கண்டல் - மன்னார்)

1992ஆம் ஆண்டு சுகயீனம் காரணமாக எமைப்பிரிந்த-

**உமாகரன்** (சித்திரவேல் அந்தோனி - புதூர்-மட்டு)

அம்பாறை - தம்பிலுவில், விநாயகபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**ஜெயநாதன் பரதராஜ்** (வீரக்குட்டி இந்திரகுமார் - பனங்காடு - அம்பாறை)

**மேனகராஜ்** (கிருஷ்ணபிள்ளை ரமேஸ் - தம்பிலுவில் - 02- அம்பாறை)

**சுகிவர்மன்-சுஜி** (வன்னியசிங்கம் ரவீந்திரன் -தம்பிலுவில் - 01-அம்பாறை)

மட்டு- 40-ம் கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

திருகோணமலை - கடற்கரைச்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1993ஆம் ஆண்டு மட்டு - கல்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சத்தியபாலன்-டயஸ்** (கோகுலசிங்கம் குபேரசிங்கம் - சின்னஊறணி - மட்டு)

யாழ் - சித்தங்கேணிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட அகோர மிகையொலி விமானத்தாக்குதலில் அதிர்ச்சியுற்று நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்த சிறுமி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8451)

### சிந்தனைக்கு

அரசியல் சட்டம் என்ற காகிதத் துண்டுகள் பற்றிக் கவலைப்படாமல், எனக்குத் தெரிவதற்கிணங்க, என் கடமையைச் செய்வேன்.

- முதலாம் வில்ஹெல்ம்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# தேர்தல் பிரச்சினைக்கு தீர்வாகப் போவதில்லை

'ஜனநாயகம்' என்ற பெயரில் சிறிலங்கா அரசாங்கம் புரியும் கேலிக்கூத்துக்கள் பல. இதில், கிழக்கு மாகாணத்தினதும், வவுனியா நகரப் பகுதியிலும் நடத்தத் தீர்மானித்துள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலும் ஒன்று. இக்கேலிக் கூத்தானது, தேர்தல் என்ற ஜனநாயக மரபையே கேவலப்படுத்துவதாகவும் உள்ளது.

முதலில், தேர்தலில் தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டிய தமிழ் மக்களில் பலர் அங்கில்லை, இருப்பவர்களில் அநேகர் அகதி முகாம்களில் உள்ளனர். இந்நிலையில், மக்கள் இல்லாப் பிரதேசங்களுக்குத் தேர்தல் நடத்த சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளது. இது சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட ஒரு சதி நடவடிக்கை ஆகும். அதாவது, மக்களில்லாப் பிரதேசங்களில் நடத்தப்படும தேர்தல் மூலம் அப்பகுதிகளைக் கபளீகரம் செய்ய சிங்கள அரசு முனைகிறது.

இதேவேளை, தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் இருப்பதாகவும் இல்லை, கிழக்கில் இடம்பெறும் 'வேட்பாளர்கள் வேட்டை' பற்றி வரும் தகவல்கள் அதிர்ச்சி அளிப்பவையாகவும் அதேவேளை, வேடிக்கையானவையாகவும் உள்ளன. வேட்பாளர் பட்டியல் ஒன்றைத் தானாகத் தயாரித்துள்ள இராணுவம் அவர்களைத் தேர்தலில் போட்டியிடுமாறு வற்புறுத்துகின்றது. அதையும் மறுப்பவர்களைக் கைது செய்து கொண்டு செல்கின்றது. வேட்பாளர்களை மிரட்டி தேர்தலில் நிறுத்தப் பார்க்கின்றது,

மேலும், பொலிஸ் நிலையத்திற்குக் கையொப்பம் இடச் செல்பவர்கள் திடீரென வேட்பாளர்களாக மாறும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. இதில் பாடசாலை மாணவனில் இருந்து பலரும் அடங்குகின்றனர். இது குறித்துத் தேர்தல் ஆணையாளர்களிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் உள்ளன. இதேவேளை, தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள ஒரு சிலரும் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை ஆகிய 'கிரிமினல்' குற்றங்களைப் புரிந்து தண்டனை அனுபவித்தவர்களும் தண்டனையில் இருந்து தப்புவதற்காக தேசவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களும் ஆகும்.

# சலுகைகளை அனுபவிக்கும் முன்னாள் மேயர்

(கொழும்பு)

பதவி விலக்கப்பட்ட முன்னாள் கொழும்பு மாநகர மேயர் ரத்னசிறி ராஜபக்ஷ இப்போதும் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திலேயே தங்கி இருப்பதாகவும், அவருக்கு வழங்கப்பட்ட நான்கு உத்தியோக பூர்வ வாகனங்களையும் தொடர்ந்து பயன்படுத்தி வருவதாகவும் எதிர்க்கட்சி வட்டாரங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

ராஜபக்ஷா மேயர் பதவியிலிருந்து சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்பட்டது தெரிந்ததே.

# வெளிநாட்டில் பணிபுரிபவர் இலவச காப்புறுதிபெறுவர்

- அமைச்சர் அபுசாலி

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கையரிடம் இருந்து எந்த விதக் கட்டணமும் அறவிடாமல் இலவசமாக அவர்களை காப்புறுதி செய்ய சிறிலங்கா அரசு திட்டமிட்டிருப்பதாகத் தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் எம் எல். எம். அபுசாலி தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களால் வருடாந்தம் 3000 கோடி ரூபா அன்னிய செலாவணியாகக் கிடைக்கிறது. இவ்வருடம் 4000கோடிரூபாவை வெளிநாட்டுச் செலாவணியாக அரசு எதிர்பார்க்கிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலமாகக் கிடைக்கப் பெறும் வெளிநாட்டுச் செலாவணி எதுவித செலவுமின்றி வருவதாகும். எனவே இவ்வாறு செலாவணி கிடைப்பதால் இத்தொழிலாளர்களை காப்புறுதி செய்வது அவசியமானதாகும் என்றார்.

பல்கலைக்கழக அனுமதி

# சிபார்சுக்குழுவின் அறிக்கை இவ்வாரம்சமர்ப்பிக்கப்படும்

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்கு கடைப்பிடிக்கப்படும் முறையை மாற்றியமைப்பதற்கானசிபார்சுகளை செய்வதற்கென நியமிக்கப்பட்ட கிங்ஸ்லி டி சில்வா கமிட்டியின் அறிக்கை இவ்வாரத்தில் சிறிலங்கா அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாடசாலைகளைத் தரப்படுத்தி அல்லது கல்விப்பிரிவுகளை தரப்படுத்தி அத்தரங்களின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படவேண்டுமென்றே அதிகமான யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய மாவட்டக் கோட்ட முறையை நீக்கி அதற்குப் பதிலாக மேற்படி முறை பற்றி யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைப் புள்ளிகளின் தொகைக்கேற்ப மட்டும் தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற யோசனையை ஒருசிலர் மட்டுமே தெரிவித்துள்ளனர். மாவட்ட கோட்டா முறையை நீக்க வேண்டுமென்று பலர் இக்குழுவிடம் சிபார்சு செய்துள்ளனர் எனவும் மேலும் தெரிய வருகின்றது.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் பல்கலைக்கழகஅனுமதிக்கெனபரீட்சை நடாத்தப்பட வேண்டும் எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொழில்மயமாக்க

இராணுவத்திற்கு உள் இருப்போரும, வெளியே இருப்போரும் கருதுகின்றனர். எனவே இராணுவத்திற்கு சரியான தலைவர்கள்தேவை திறமைவாய்ந்த தீவிரமான விடுதலைப் புலிகளை வெல்லவேண்டுமானால் இதுவே குறைந்தளவு தகுதியாகவாவதுஇருக்கவேண்டும்;

அண்மையில் வெளியான பூநகரி, ஜனகபுர அழிவு குறிகுழுக்களுககு அனுமதிக்கக் கூடாது கடந்த இரு தசாப்தங்களாக இராணுவ அரசியல் தலைமைகளால் விடப்பட்ட தவறுகளினால் சிறிலங்கா பெருமளவு இரத்தம் சிந்திவிட்டது. குறித்த சில முக்கிய மாற்றங்களை போர் இயந்திரத்தை முன்னேற்றுவதற்காக செய்யத் தவறின் சிறிலங்கா மேலும் பல பூநகரிகளை சந்திக்க நேரிடலாம்.

புலிகளால் வடக்கில் பல முகாம்கள் அழிக்கப்பட்டு

ஜெனிவா தூதுக்குழுவில் முன்னாள் பிரிகேடியர்

# அமைச்சு நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி பணிப்புரை விடுப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ. நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் சிறிலங்காத் தூதுக்குழுவில் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இடம்பெற்றது எவ்வாறு என்பது பற்றி விசாரணை நடத்தப்படுவதாக வெளியுறவு அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் கூறியுள்ளார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பேச்சாளர்ஒருவர் இது பற்றி மேலும் கூறுகையில் அடுத்த வாரம் ஜெனிவாவில் ஆரம்பமாக இருக்கும் முக்கியத்துவம் மிகுந்த இக்கூட்டத்தில் அரச தரப்புத் தூதுக் குழுவில் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இடம்பெற்றமை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி வெளியுறவு அமைச்சரைப் பணித்திருப்பதாகத் தெரிவித்தார்.

இந்தச் சர்ச்சை தொடர்பாக வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் மௌனம் சாதிக்கும் அதேவேளை இதில் பெரும் மர்மம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜெனிவா செல்ல இருக்கும் தூதுக் குழுவில் அரசாங்கத் தரப்பு சட்டத்தரணி நிகால் றொட்றிகோ, சட்டமா அதிபர் திலக மாரப்பன, சர்வதேச விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், வெளியுறவு அமைச்சின் அதிகாரி சுருவி தேவராஜா ஆகியோர் இடம்பெறவுள்ளனர். இக்குழுவுடன் முன்னாள் பிரிகேடியரும், தற்போதைய உளவியல் நடவடிக்கைகளுக்கான பணிப்பாளராகப் பாதுகாப்பு அமைச்சில் பணி புரிபவருமான தயா விரசேகராவின் பெயர் இடம்பெற்றமை தொடர்பாகவே சர்ச்சை எழுந்துள்ளது.

# சிற்றூழியர் சேர்ப்பதற்கு புதிய முறை அமுலாகும்

அரசாங்கமற்றும் மாகாண சேவைகளுக்கு சிற்றூழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான புதிய நடைமுறையொன்றைக் கையாளுமாறு பொதுநிர்வாக அமைச்சு சகல அமைச்சுகளுக்கும், திணைக்களங்களுக்கும் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கும் அறிவித்துள்ளது.

குறைந்த வருமானம் பெறும் சனசக்தி உணவு முத்திரை பெறும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு பிரதேச செயலாளரின் சிபார்சின் பெயரில் மேலதிகமாக இருபது புள்ளிகள் வழங்கப்படும்.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு மேலதிகமாக 25 புள்ளிகள் வழங்கப்படவுள்ளது.

சிற்றூழியர் பதவிகளுக்கு நியமனம் பெறுபவர்கள் 8ம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் 18-40 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்சீரமைக்கப்பட்ட முறையில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா ராணுவ கட்டுப்பாட்டு பகுதியில்

# பொது இடங்களில் வாகனம் நிறுத்த தடை

(வவுனியா)

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் பொது இடங்களில் வாகனங்களை நிறுத்தக் கூடாது என இராணுவம் உத்தரவிட்டுள்ளது. றம்பாவை பஸ் குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து வவுனியாவில் படையினர் இப் புதிய நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

வாடகைக் கார், ஓட்டோ, நிறுத்துமிடங்களில் சாரதிகள் தமது இருக்கையிலேயே அமர்ந்திருக்க வேண்டும் எனவும் படையினர் பணித்துள்ளனர். முடியுமானளவு பயணிகளின் பொதிகள் சந்தேகத்திற்கு இடமற்றவை என்பதை சாரதிகள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# தென்மாகாணசபை தேர்தல்

# தபால்பொதிகள் இறக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வாதுவ கப்பலில் ஏற்றி வரப்பட்ட தபால் பொதிகள் நேற்று இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இக்கப்பலில் 756தபால் பொதிகள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன. இப்பொதிகள் இன்று இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

# பொதுக்கூட்டம்

(கொல்புரம்)

வலிமேற்குப் பிரதேச வர்த்தகர் சங்கம் நடாத்தும் கிளைச் சங்கங்களுக்கான பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3.00மணியளவில் வட்டு இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கானை வலிமேற்குப் பிரதேசவர்த்தகசங்கத் தலைவர் திரு. த. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது (41)

# அதிமேற்றிராணியார் இன்று வருகை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு அதிமேற்றிராணியார் கலாநிதி நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோமற்றும் திருகோணமலை மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் நேற்று இளவாலை, மாதகல் ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தனர்.

விமானம் மூலமாக பலாலி வந்து சேர்ந்த இவர்கள் மேற்படி பகுதிகளுக்குச் சென்று அங்கு தங்கியிருக்கும் மக்களின் நலன்கள் குறித்து கேட்டறிந்தனர். அத்துடன் இளவாலை தேவாலயத்துக்

தண்டனையில் இருந்து தப்புவதற்காக தேசவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களும் ஆகும்.

வாக்காளர்கள், வேட்பாளர்கள் மட்டுமல்ல, அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தத் தீர்மானித்துள்ள இடங்களில் உள்ளூராட்சிக் கட்டடங்களே இல்லை. ஒன்று கட்டடங்கள் இராணுவ நடவடிக்கையின்போது முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. அல்லது சிறிலங்கா இராணுவத்தினரால் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் எங்கே கூட்டம் நடத்துவது என்பதும் மக்களின் மனதில் எழுந்துள்ள கேள்விகளில் ஒன்றாகும்.

இவை யாவற்றின் ஒட்டுமொத்த வடிவமாகவே கிழக்கு மாகாணத்தில் தேர்தல் பரபரப்பே காண முடியாது உள்ளது. அதாவது, மக்கள் பங்குபற்றத் தயாராக இல்லாத, வேட்பாளர்களைத் தேடும் ஒரு தேர்தலில் எவ்வாறு பரபரப்பும், உற்சாகமும் உருவாக முடியும்? ஒரு பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டால் அங்கு தேர்தல் நடத்தி விடலாம் என்று சிறிலங்கா அரசு எண்ணுகிறது. ஆனால், ஒரு பிரதேசத்தில் தேர்தல் நடத்துவதானால் அப்பகுதி மக்களின் சுதந்திரமும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டாலே தேர்தல் என்பது மக்களால் வரவேற்கப்படும் என்பதை சிறிலங்கா அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, தேர்தல் என்பது மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கே ஒழிய அரசாங்கம் தனது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படுவதல்ல. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமோ, தேர்தல் நடத்துவதென்பது மக்களின பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக என்பதற்கல்ல. இராணுவ ரீதியாக சரிந்து போயுள்ள அரசாங்கத்தின் நிலையைச் சீர் செய்யும் ஒரு பிரசாரத்திற்காகவே ஆகும்.

இதன் காரணமாகவே, யாருக்குத் தேர்தல்? எதற்காகத் தேர்தல் என்ற அடிப்படையே இல்லாமல் தேர்தல் நடத்தப் பார்க்கின்றது. ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இத்தேர்தலின் மூலம் எதையும் சாதித்து விடப் போவதில்லை. தேர்தல் எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வாக முடியும் என்றால், இலங்கையில் இன்று பிரச்சினை என்பதே இருந்திருக்க மாட்டாது. அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினை என்பதே இருந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், 1977ஆம் ஆண்டில் தமிழ்மக்கள் தேர்தல் மூலம் அளித்த தீர்ப்பின்படி தமிழீழம் உருவாகி இருக்க வேண்டும். சிங்கள அரசு அதை அங்கீகரித்திருக்க வேண்டும். ஆனால், அவை எதுவும் நடைபெறவில்லை. அதாவது, தேர்தல் தீர்வு எதையும் கொண்டு வந்துவிடவில்லை.

---

அண்மையில் வெளியான பூநகரி, ஜனகபுர அழிவு குறித்து விசாரணை அறிக்கைகளைப் பார்த்தால் ஒன்று தெளிவாகிறது. அதாவது அம் முகாம்களுக்கு பொறுப்பாக இருந்தவர்களுக்கு கள அனுபவம் இல்லை என்பதாகும். எதிரி குறித்த அறிவோ, எதிரியின் உளவியலோ, எதிரியின் தந்திரங்களோ எதுவும் அறியாதவர்களாக அவ்வதிகாரிகள் இருந்தனர். அவர்கள் இராணுவ வழிகாட்டு நூலில் குறிப்பிடப்பட்டிருந்த எளிய வழிகாட்டல்களையே பின்பற்றவில்லை. இராணுவத்தால் வெளியிடப்பட்ட 17 ஆம் வழிகாட்டல்களைக்கூட அவர்கள் வாசித்திருக்கவில்லை. எதிரிகள் இத்தகைய பலவீனங்களை அறிந்து தாக்கி படையினர் மத்தியில் இழப்புகளை தோற்றுவிக்கின்றனர்.

இதற்காக சில நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டும். ஒவ்வொருவரும் நன்கு பரீட்சிக்கப்படவேண்டும். இந்திய இராணுவத்தில் மேஜர் தரத்திற்கு மேலாக எந்த தரத்தையும் வழங்குவதற்கு முன் அவர்கள் பரீட்சைஒன்று எழுதவேண்டும். பரீட்சையில் அவர்கள் சித்திபெறத் தவறின் மேஜர் தரத்துடன் ஓய்வுபெற வேண்டியதுதான் இத்தகைய போட்டிப் பரீட்சைகள் இங்கு இராணுவத்தில் மற்றும் பொலிசில சேர்த்துக் கொள்ளவேண்டும்.

சிறிலங்கா இராணுவம் கடந்த கால அனுபவங்களிலிருந்து பாடம் படிக்க வேண்டும். முன்னையவர்களிடமிருந்தும் பதவியில் கடைசியாக இருந்த சிசில் வைத்தியரட்னவிடமிருந்தும் புதிய இராணுவத் தளபதி பாடம் கற்கவேண்டும். சிசில் வைத்தியரட்ன போரில் திறமை காட்டிய தளபதிகளை பதவி உயர்த்த தவறினார். புதிய இராணுவத் தளபதி தமது நண்பர்களையும், உறவினர்களையும் பதவி உயர்த்து மாறு அழுத்தம் தரும் சில

---

புலிகளால் வடக்கில் பல முகாம்கள் அழிக்கப்பட்டு வருவதை கொழும்பிலுள்ள மனித ஞாபகசக்தி மறந்து விட்டது. 1974இல் நான்கு உறுப்பினர் கொண்ட விடுதலைப் புலிகள் 1979இல் 22 ஆகி 1983இல் 40ஆகி 1987இல் 6000ஆகி இப்போது 12,000 பேர் கொண்டதாகியுள்ளது. அவர்கள் தரைப்படையும் கடற்படையும் சிறிலங்கா காலாட்படையையும் கடற்படையையும் சந்திக்கக் கூடியளவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா தப்பிவாழ ஒரே வழி நடவடிக்கை பகுதிகளில் சிறந்தஒருவரை நியமிப்பதே. அவரும் களத்தில் தமது திறமையை நிரூபிப்பவராக இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் பலம்பெற்று வரும் எதிரியை சந்திக்கவும் பலவீனப்படுத்தவும் இராணுவம் பொருத்தமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இப்போது பதவி உயர்வு பெற்றவர்களில் ஒருவரைத் தவிர மற்றையவர்கள் தலைமையகத்தினுள்ளேயே நீண்ட காலத்தை கழித்தவர்கள். கள அனுபவம் அற்றவர்கள்.

இன்று இராணுவத்தில் அனுபவம்வாய்ந்த ஒருசிலரே உள்ளனர். அரசியல் மற்றும் இராணுவ தலைவர்கள் இவர்களை உற்சாகப்படுத்த தவறின் அவர்கள் இராணுவத்தை விட்டு ஓய்வு பெற்று சென்று விடுவர் அல்லது பின்னாலிருந்து விடுவார்கள். சேவை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி நாம் போரில் தோற்பதா அல்லது திறமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி நாம் போரில் வெல்வதா என்பதே இன்றைய கேள்வி. இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற போரிடும்இராணுவத்தைக் கொண்ட நாடுகள திறமையடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதையே பாரம்பரியமாகக் கொண்டுள்ளன என அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# தென்மாகாணசபை தேர்தல் 228 வேட்பாளர் போட்டி

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தலில் நான்கு அரசியற் கட்சிகளும் ஒரு சுயேட்சை குழுவும் போட்டியிடுகின்றன. 53 ஆசனங்களுக்கு 228வேட்பாளாகள் போட்டியிடுகின்றனர்.

ஐ.தே.க, மக்கள் கூட்டணி நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்களிடையே கடும் போட்டி நிலவும் எனத் தெரிவிக்கப்படுகிறது. நியமனப் பத்திரம் ஏற்கும் காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது தெரிந்ததே.

---

ஏழுவருடம் தேர்தலில் போட்டியிடாத

# கட்சிகளின் பதிவுகளை ரத்துச்செய்ய கோரிக்கை

ஏழுவருட காலத்திற்குள் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடாத பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் பதிவை ரத்துச் செய்ய வேண்டும்என தேர்தல் ஆணையாளர் கேட்கப்பட்டுள்ளார்

இப்போது சிறிலங்காவில் பதிவு செய்யப்பட்ட 37கட்சிகள் இருந்த போதிலும் ஒரு சில மட்டுமே தேர்தல்களில் போட்டியிட்டு வருகின்றன. இதனைத் தவிர்க்கவே கணிசமான கட்சிகளின் பதிவை ரத்துச் செய்யக் கூடிய இவ்வாறான யோசனையொன்று தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சில அரசியல் கட்சிகளின் தலைமை அலுவலகம் இயங்கும் இடம்பற்றிய தகவல்கள் தவறானதாக தரப்பட்டுள்ளதாகவும் கட்சி உயர்மட்ட உறுப்பினர்களின் பெயர்கள் சில தரப்பட்டுள்ள போதும் அவர்கள் தற்போது கட்சியில் இல்லைஎனவும் இவ்வாறான கட்சிகளின்பதிவுகளை விசேட ஏற்பாடுகளின் கீழ் ரத்துச் செய்ய வேண்டும எனவும் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தேர்தல் ஆணையாளரை கேட்டுள்ளார்.

இவ்வாறு செய்யப்படுமாயின் பல கட்சிகள் தமது பதிவுகளை இழக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது இது குறித்து கருத்து வெளியிட்ட தேர்தல் ஆணையாளர் இவ்விடயம் குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிவித்தார்.

---

மூவருக்கு

யோருமே எரிகாயங்களுக்குள்ளானவர்களாவர். இச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் நடந்தது. (சி)

---

இராணுவத்தை

சேர்ந்தனர்.

பூநகரி-பெரிய வேலிப் பகுதியில் காயமடைந்த நிலையில் சிக்குண்டுள்ள மீனவரை மீட்டுவர நேற்று இச் செய்தி எழுதப்படுகையில் சில வள்ளங்களில்உறவினர்கள் அப்பகுதிக்குச் சென்றிருந்தனர்

---

அரசியல்

ப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவர்கள் ஒரு வேளை பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவித்தால் எத்தகைய தீர்வு முன்வைக்கப்படுவதற்குத் தயாராக இருக்கிறது? எதுவுமே இல்லாத நிலையில் அரசியல்வாதிகள் நாட்டின் முக்கிய பிரச்சினைக்கான தீர்வு எதையும் முன்வைப்பவர்களாக இல்லை' எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

---

சேட்டறிந்தனர். அத்துடன் இவ்வாலை தேவாலயத்துக்கும் சென்று வழிபாடு நடாத்தினர்.

இன்று காலை காங்கேசன் துறையில் இருந்து பருத்தித்துறைக்கு வரவிருக்கும் 'வாதுவ' என்ற கப்பல் மூலம் பருத்தித்துறை யூடாக யாழ் நகருக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் இங்குசில தினங்கள் தங்கியிருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க) (நி)

# கோடரி வெட்டிற்கு வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை மானிப்பாயில் இடம்பெற்ற கோடரி வெட்டு சம்பவம் ஒன்றில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

மாமனாருக்கும் மருமகனுக்குமிடையே இடம்பெற்ற தகராறு கொலையிலபோய் முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சின்னவன் நாகமணி (வயது 75) என்ற கனகசபை வீதி மானிப்பாயில் வசித்தவரே கொல்லப்பட்டவராவர் கோடரியால் தாக்கிவிட்டுச் சென்ற மருமகன் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

---

பாதுகாப்பு

உறுப்பினர் பதவி வழங்கப்படவுள்ளது தென்மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் மேற் கொள்ளப்படவிருக்கும் இம் மந்திரிசபை மாற்றத்தின் போது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலரும் மறுத்துவிட்டனர். இவ்வாறு அப்பத்திரிகை மேலும் கூறுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

## அரும்பொருளகம்

எமது வரலாற்றின் எச்சங்கள் பலவற்றைத் தேடிப் பாதுகாக்கும் நோக்குடன் நமது பல்கலைக்கழகத்தில் அரும்பொருளகம் ஒன்று வரலாற்றுத் துறையினாற் புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வரும்பொருளகத்தில் பழைய ஏட்டுச் சுவடிகள், நாணயங்கள் (காசுகள்), நமது கலைஞரின் கைவண்ணத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டும் பல்வகை உலோகங்களில் அமைந்துள்ள கட்டங்கள், பாக்குவெட்டிகள், குத்துவிளக்குகள் போன்றனவும், ஆலயவழிபாட்டிற் குரிய சிறப்பான பொருள்களும் சேகரித்து வைக்கப்படவுள்ளன. இவற்றை வைத்திருப்போர் நமது பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்யும்படி அன்புடன் விண்ணப்பிக்கின்றோம். இதற்கான சான்றிதழும் வழங்கப்படும் இப்பொருள்களுக்குரிய சன்மானம் கோருவோருக்கும் இவற்றுக்குரிய பெறுமதி வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

(இ-8450)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 23-06-1925



அம்பாள் அடியில்: 05-02-1993

### அமரர் வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்

(மாயவர்)

(அச்சு இயந்திர தொழில்நுட்ப வல்லுநர்)

திதி: 26-01-1994

ஐயா!

பன்னிரண்டு திங்களாய் நின்பாசமுகம் காணாது
பரிதவித்து நிற்கின்றோம்.
எம்மிதயம் தன்னை நின் நினைவு வாட்டுதுவே
உம் இனியகுரலதுவும் எம்காதில் ஒலிக்கிதுவே
அன்புடனே எங்களுக்கு ஆறுதல்தான் கூறியுமே
கண்மணியே ஐயா எம் கலிதீர்க்க வாராயோ!

ஐயா!

ஆண்டொன்று ஆகியென்ன ஆயிரம்தான் ஆனாலென்ன
அன்பே உன் நினைவலைகள் நித்தமும் ஒளிர்ந்திடும்
எம்மனதில்

யாழ். போதனா மருத்துவ மனைக்கு

## பிரிட்டிஷ் அன்பளிப்பு உபகரணங்கள் வந்தன

(வடமராட்சி)

வடபகுதி அரசினர் வைத்தியசாலைகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கிய மருத்துவ உபகரணங்களில் எட்டு மருத்துவ கொள்கலன்களும், மற்றும் உபகரணங்களும் பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த 'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஆறு கொள்கலன்கள், எக்ஸ்ரே கருவிகள், ஜெனரேட்டர்கள் ஆகியன வந்துள்ளன. மேலும் புங்குடுதீவு ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைகளுக்கெனவும் இரண்டு கொள் கலன்கள் வந்தன.

யாழ். மாவட்டத்திற்கென எடுத்து வரப்பட்ட பொருள்கள் இறக்கி முடிவடைந்ததும் தீவகத்திற்கான கொள்கலன்கள் எடுத்துச்சென்று இறக்கப்படவுள்ளன. (யோ)

### கருத்தரங்கு

யோகாசனச் செய்முறையும் விளக்கமும் தொடர்பான கருத்தரங்கொன்று எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் கோ. ரவீந்திரன், திருமதி திருமகள் சிவசங்கர், யோகிராஜன் ஆகியோரும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

## நெஞ்சம் நெகிழும் 120 ம் நாள் நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு 27.6.1974



ஆள்பவன் அழிப்பு 29.ƽ.1993

### செல்வன் சுப்பையா பாலச்சந்திரன்

[சந்திரன்]

(நவக்கிரி புத்தூர்)

நிலா முகம் எங்கள் சந்திரன்
நினைவை விட்டகலா தெங்கள் சந்திரன்
நண்பர்க்கு நண்பனாய் சந்திரன்
நல்லவைகள் யாவைக்கும் சந்திரன்
அரக்கர்கள் ஏவிய செல்லினால்
அடியோடு சாய்ந்தவர்கள் ஐவர்
அகலவில்லை எம் மனதில் தரிசனங்கள்
ஆறுகின்றோம் தெய்வத்தின் சந்நிதானத்தில்
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

இன்று (26-01-94) எமது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எல்லாளன் சனசமூக நிலைய வீதி, நவக்கிரி. -குடும்பத்தினர்

(7339)

## 30-ம்நாள் நினைவஞ்சலி



### பேராசிரியர் வித்தி நினைவு சொற்பொழிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நினைவுச் சொற்பொழிவு பல்கலைக்கழக தமிழ்மன்ற ஆதரவில் இன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. மாலை மூன்று மணியளவில் நடைபெறும் இந் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமைவகிக்க பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ஆசியுரை வழங்கவுள்ளார்.

பொருளியற்துறை தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் ''யாழ்ப்பாண சமூக அரசியல் நிலைப்பாடுகள் - இருபதுகளும் முப்பதுகளும்'' என்னும் தலைப்பில் நினைவுச் சொற்பொழிவை யாற்றுவார். குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நட்பு என்னும் நாடகமும் இடம் பெறும்.

### அறிவியலரங்கு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடாத்தும் முழுநிலா நாள் அறிவியல் அரங்கு நாளை வியாழக்கிழமை மாலை பிற்பகல் நான்கு மணிமுதல் ஐந்து முப்பது வரை நடைபெறவுள்ளது. இந்த அரங்கில்ஆளுமை வளர்ச்சி என்னும் பொருள் பற்றி சாந்தியகப் பணிப்பாளர் பி. ஏ. சி ஆனந்தராசா உரைநிகழ்த்தவுள்ளார்.

### உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்டமட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று மாலை 3-00 மணிக்கு மட்டுவில் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் மந்துவில் மரிக்கார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதும்.

### ''பொய்க்கால்'' மேடை ஏறுகிறது

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் வழங்கும் ''பொய்க்கால்'' எனும் நாடகம் இன்று பிற்பகல் 4. 30 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் மேடையேறவுள்ளது.

## கிழக்கில் ராணுவத்தினரின் சோதனைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவக் காவலரண்கள் கேந்திர இடங்களில் அமைக்கப்பட்டு கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ''லங்கா தீப'' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

இக் காவலரண்களில்சோதனையிடுவதற்காக பொது மக்கள் காவலரண்களிலிருந்து 100யார் தூரத்திற்கு முன்னரே நிறுத்தப்பட்டு தனித்தனியாக நடந்துவருமாறு அழைக்கப்பட்டு கடும் சோதனையிடப்படுவதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது சிறுவர்கள் குழந்தைகள் வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி சோதனையிடப்படப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

25-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 401

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9696, 27-4024, 43-6281, 26-9201, 42-3114, 26-2414, 24-9596, 26-2941, 28-7560, 22-8075, 41-7563, 28-1085, 26-786, 26-4792, 28-1414, 24-7941, 24-5964, 24-4238

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-2745, 27 7542, 22-6163, 26-0632, 26-9992 41-1227, 27-5449, 26-1349, 26-0535, 42-0849, 42-9345, 41-9876, 26-4139, 26-9772, 41-9220, 24-6215, 41-8686, 43-3576

யாழ். கனகரத்தினம்
மத்திய மகாவித்தியாலயம்

## வணிக ஜோதி வெளியீட்டு விழா-16ஆவது மலர்

இடம்:- கல்லூரி மண்டபம்
காலம்:- 26.01.94 புதன்கிழமை
பி.ப. 2 மணி

தலைவர்:- செல்வன் அ. அலஸ்ரீன்குமார்

பிரதம அதிதி: திரு சி. புலேந்திரன்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)

விசேட அதிதி:- திரு. வே பாலகுமாரன்
(தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை துணைப்பொறுப்பாளர்)

நூல் வெளியீடு:- முதற்பிரதியைப் பெறுபவர்
திரு.செ, பத்மநாதன்
(திட்டப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

அறிமுகவுரை:- திரு.க. தேவராஜா
(சிரேஷ்ட விரிவுரையாளர், வணிக முகாமையியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்)

இவ் வெளியீட்டு விழாவிற்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்-

வர்த்தக மாணவ மன்றம்
கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம். (7334)

## மிட்ரவுண் றோட்டரக்ட் கழகம்

காளி கோவிலடி, மனைவி, மக்கள்,
மல்லாகம். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(கி-8456)

# மரண அறிவித்தல்

## திரு. பொன்னையா சிவகுரு

(7-ம் வாய்க்கால் கிளிநொச்சி)

திரு: பொன்னையா சிவகுரு காலமானார். அன்னார், சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சாந்தநாயகி, இராஜநாயகி, செல்வநாயகி (கனடா) வேதநாயகி, காலஞ்சென்ற தெய்வநாயகி, சற்குண நாயகி, யசோதரன், குணநாயகி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், வினோகரன், இராஜலிங்கம், மனோகரன் (கனடா), பரஞ்சோதி(கனடா) பாக்கியநாதன், பாக்கியராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுரேஸ் (சுவிஸ்) றமேஸ் (கனடா), சுகந்தினி, சுதர்சினி, விஜயயாழினி, சுபேந்திரன், பார்த்திபன், சங்கர் (கனடா), பிரசாத் (கனடா), பிரகாஸ் (கனடா), பிரதீபா (கனடா), சோபனகாந் (கனடா), சயன் (கனடா), ஜீவிக்கா ஆகியோரின் பாசம்மறவாப் பேரனும், பொன்னையா குமரேசனின் அன்புத் தம்பியும், குமரேசு செல்லம்மாவின் மைத்துனரும், கந்தசாமி-சறோஜினி தேவி, தங்கராசா-சகுந்தலாதேவி ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்;

ஈமக்கிரிகைகள் 26.01.94 இன்று புதன்கிழமை 10 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு, தகவல்:
சாவகச்சேரி; சி. யசோதரன் (மகன்)
(7337)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



## திருமதி வசந்தாதேவி சபாநாதன்

(நூலகர்; பொது நூலகம்; நாவற்குழி)

தோற்றம்:01-12-1952 மறைவு: 28-12-1993

அன்னைக்கும் தந்தைக்கும் அருமை மகளாக அவதரித்து
ஆருயிர் சகோதரர் தசமருடன் கூடிவிளையாடி
ஆசிரியர் போற்றும் நல்மாணவராக உயர் கல்வி கற்று
அதிகாரிகள் புகழும் வல் நூலகராகப் பணியாற்றி
ஆல்போல் தழைத்திட அன்புக் கணவன் கரம்பற்றி
அழகுறுவேலவன் வன்னியம் பதிதனில் குடிகொண்டு
அறுகுபோல் வேரூன்ற மழலைகள் நால்வரைத் தந்து
தாம் பெற்ற இன்பம் தன் இனம் பெறவேண்டி
மாதர்கட்கென அபிவிருத்திச் சங்கம் என்றும்
சிக்கனக் கடன் வழங்கு சங்கமும் பக்குவமாய் நடத்தி
பாலர்பயின்றிடப்பாலமுருகன்பாடசாலையினைப்பேணி
நல்மாணாக்கர் உயர்ந்திட புதிய கல்விநிலையத்திற்கு
காற்கோள் நாட்டி கட்டி வளர்த்து
முத்தமிழ் வளர்த்திட சங்கீத தீபத்தினை ஏற்றி
ஊரார் போற்றும் உன்னப் பாங்குடன் வாழ்ந்த நீ!
பாதி வழியில் பாலகர் கதற; சுற்றத்தாருடன்
நாம் சூழ்ந்து புலம்பிட விட்டெமை ஏகினையோ!
விதியை நோகின்றோம் வசந்தாவே!
நமக்கினி வாழ்வில் உண்டோ வசந்தம்.
ஓம் சாந்தி-சாந்தி-சாந்தி

கைதடி-நாவற்குழி அன்புக்கணவன்-பிள்ளைகள்
கைதடி. அம்மா-சகோதரர்கள்
(7336) உற்றார், உறவினர், நண்பர்கள்.

## பௌதிகமன்ற ஒன்றுகூடல்

க. பொ. த. (உ/த) பௌதிக மன்றத்தின் ஒன்றுகூடலும் செயலமர்வும் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

CLUB நடத்தும்

உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில்
ஐங்கென்றீஸ் வி. க. எதிர் ஸ்கந்தா வி. க.
பாடுமீன் வி. க. எதிர் நீக்கலஸ் வி. க.
இடம்:- பாஷையூர் அன்ரனிஸ் வி. க. மைதானம்
காலம்:- 26-01-94 இன்று பி. ப. 3-00 மணி
(7338)

உ

சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் தைத்திருநாள் 16-ம் நாள் (29-01-1994) சனிக்கிழமை பகல் 11-30 — 12-30 மணி வரையில் வரும் மேடலக்கின சுபவேளையில்

திரு- திருமதி வேலாயுதம் தம்பதிகளின் செல்வப் புதல்வன்
**ரவிகாந்தன்**
(உரிமையாளர் துரை பேக்கவுஸ்)
அவர்களுக்கும்

திரு: திருமதி தவராஜசிங்கம் தம்பதிகளின் செல்வப் புதல்வி
**மகேஸ்வரி**
அவர்களுக்கும்

சுன்னாகம் சூராவத்தையிலுள்ள முத்துமாரி அம்மன் ஆலய இராஜ ராஜேஸ்வரி மண்டபத்தில் மங்கல நாண்பூட்டு வைபவம் நடைபெறத் திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறும், 30-01-1994 அன்று மணமகன் இல்லத்தில் பி. ப. 3 மணியளவில் நடைபெறும் வரவேற்பு விழாவிலும் பங்கு கொண்டு எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி சரஸ்வதி வேலாயுதம்
குடும்பம்
சூராவத்தை
சுன்னாகம்.

திருமதி செல்வமலர் தவராஜசிங்கம்
குடும்பம்
கச்சாய் றோட்
சாவகச்சேரி.

(7332)